Tamilmanam International Research Journal of Tamil Studies
Volume 12, Issue 02 (July-2026)
www.tamilmanam.in

ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm12022026

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Peer-Reviewed | Open Access | Crossref | Google Scholar
SJIFImpact Factor3.5| Multidisciplinary
Article DOI: https://doi.org/10.63300/tm12022026.39

Case compounds in the Tamil grammatical tradition

T. P. Surya*,
Ph.D. Research scholar, Department of Tamil, Presidency college (A.), Chennai – 600005.
Orcid id: https://orcid.org/0009-0008-9071-5005
*Corresponding Author Email: tpsuriya@gmail.com.

Article Info
Received on 27-June-2026, Revised on 29-June-2026, Accepted on 29-June-2026, Published on 20-July-2026

ABSTRACT

Compound structures serve as an indispensable syntactic and grammatical component within the Tamil grammatical tradition. Tolkappiyar classifies these compound structures into six distinct categories. Among these, two divergent perspectives currently exist regarding the structure and definition of case compounds. One school of thought argues that a case compound is formed merely by the elision of case markers between two constituent words. Conversely, another school contends that beyond the mere elision of case markers, these constituent words must fuse indivisibly to function with the "nature of a single word." This article comprehensively analyzes these contrasting viewpoints by comparing the commentaries of traditional grammarians, the interpretations of grammatical scholars, and the theories of modern linguists. By prioritizing semantics—the fundamental core of language—this study establishes that it is grammatically appropriate to define a case compound as a compound syntactic structure that not only conveys case meanings but also functions organically as a unified, single lexical unit without any phonetic hiatus.

KEYWORDS: *Tholkaappiyam, Thogaimozhi, Vetrumaithogai, Ilakkanam, Uraiyaasiriyargal, Mozhiyiyal.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

Tamilmanam International Research Journal of Tamil Studies *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
Volume 12, Issue 02 (July-2026)
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm12022026*

தமிழ் இலக்கண மரபினில் வேற்றுமைத் தொகைமொழி

[1]**த. ப. சூரியா**, முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,

மாநிலக் கல்லூரி (த.), சென்னை – 600005.

மின்னஞ்சல்: tpsuriya@gmail.com

Orcid id: https://orcid.org/0009-0008-9071-5005

ஆய்வுச்சுருக்கம்

தமிழ் இலக்கண மரபினில் அமையும் தொடரியல் கூறுகளுள் இன்றியமையாததாக விளங்கும் இலக்கணக்கூறு 'தொகைமொழி' ஆகும். தொல்காப்பியர் தொகைமொழிகளை ஆறாக வகைப்படுத்துகிறார். அவற்றுள் வேற்றுமைத்தொகையின் கட்டமைப்பு குறித்தும் அதன் வரையறை குறித்தும் இருவேறு கருத்துகள் நிலவி வருகின்றன. ஒரு சாரார் இரு சொற்களிடையே வேற்றுமை உருபுகள் தொக்கி வருவதே வேற்றுமைத்தொகை எனக் கருதுகின்றனர். மற்றொரு சாரார் வேற்றுமை உருபுகள் தொகுவது மட்டுமின்றி, அச்சொற்கள் பிளவுபடாமல் இணைந்து 'ஒரு சொல் நீர்மைத்தாய்' வருவதே வேற்றுமைத்தொகை என்று கருதுகின்றனர். இக்கட்டுரை, இவ்விருவேறு கருத்து நிலைகளை இலக்கண உரையாசிரியர்களின் உரைகள், இலக்கண அறிஞர்களின் விளக்கங்கள், மொழியியல் அறிஞர்களின் கோட்பாடுகள் ஆகியவற்றை ஒப்பிட்டு விரிவாக ஆராய்கிறது. மொழிக்கு அடிப்படையாக விளங்கும் பொருண்மைக்கு முதன்மை அளித்து, வேற்றுமைப்பொருளை உணர்த்துவதோடு மட்டுமின்றி, விட்டிசையாமல் ஒரு சொல் நடையில் அமையும் தொகைநிலைத் தொடர்களே வேற்றுமைத் தொகைமொழிகள் என்று கொள்வதே இலக்கணப் பொருத்தமுடையது என்பதை இந்த ஆய்வு நிறுவுகிறது.

முக்கியச் சொற்கள்: தொல்காப்பியம், தொகைமொழி, வேற்றுமைத்தொகை, இலக்கணம், உரையாசிரியர்கள், மொழியியல்.

முன்னுரை

பண்டைக் காலத்தில் மொழி ஆராய்ச்சி குறித்து அறிவியல் முறையில் சிந்தித்து, இலக்கணம் செய்ததில் முதன்மையானவர்கள் தொல்காப்பியரும் பாணினியும் ஆவர். உலக அளவில் மொழி குறித்த ஆய்வுகள் தொடங்கப்பட்ட காலத்தில், இவ்விருவரும் மொழியை ஆராய்ந்து விளக்கமுறையில் இலக்கணம் இயற்றினர். இவ்விருவருள் எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்றனையும் விளக்கும் முழுமையான இலக்கண நூலை இயற்றியவர் தொல்காப்பியர். பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு, செய்யுள் வழக்கு ஆகியவற்றை முதலாகக் கொண்டு யாக்கப்பெற்ற

,| Copyright © Author(s)

ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm12022026

இலக்கண நூலான தொல்காப்பியம், தமிழ் இலக்கண மரபின் 'மயங்காத் தன்மையை' நிலைநிறுத்துகிறது. அம்மரபின்படியே, இந்நூல் மூன்று படலங்களில் ஐந்து இலக்கணங்களைக் கூறுகிறது. இந்நூல், சொல்லிலக்கணத்தின் வாயிலாகவே தொடர் இலக்கணத்தையும் உணர்த்துகிறது. இத்தொடர் இலக்கணத்தில் உள்ள கூறுகளுள் மிகச் சிறப்பானதாகவும் தமிழ் மொழியின் வளத்தினை உணர்த்தவல்லதாகவும் அமைவது 'தொகை மொழிகள்'. தமிழில் ஆறு வகையான தொகை மொழிகள் இருப்பினும் இக்கட்டுரையில் மொழித்தொடர்ப் பொருண்மைக்கு முதன்மைப் பங்காற்றும் வேற்றுமைத் தொகைகளின் இலக்கணம் குறித்து விளக்கமாகப் பார்ப்போம்.

தொகை – பொருள்

'தொகை' என்ற சொல்லுக்குக் கூட்டம், சேர்க்கை, கொத்து, தொகுத்துக் கூறுகை, உருபு முதலியன மறைகை முதலிய பதினெட்டுப் பொருள்கள் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலியில் தரப்பட்டுள்ளன. தொக்கி வருதல் என்பது ஒன்றுடன் ஒன்று பிரிக்க முடியாதவாறு சேர்ந்து வருதல் என்றும் சில இடங்களில் மறைந்து வருதல் என்ற பொருளிலும் இலக்கண நூல்களில் கையாளப்படுகிறது.

தொகைமொழி வகைகள்

தொகை மொழிகள் குறித்து இலக்கண உரையாசிரியர்கட்குள் பல்வேறு கருத்துவேறுபாடுகள் காணப்படுகின்றன. தொகை மொழிகளைத் தொல்காப்பியர் ஆறு வகைப்படுத்துகிறார். அவை வேற்றுமைத்தொகை, உவமத்தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகை. வேற்றுமைகள் குறித்து வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு ஆகிய இயல்களில் கூறியுள்ள தொல்காப்பியர், வேற்றுமைத் தொகைகள் குறித்து எச்சவியலில் தொகை மொழிகளைப் பற்றிக் கூறுமிடத்தில் பதிவு செய்கிறார்.

வேற்றுமைத் தொகையே யுவமத் தொகையே
வினையின் றொகையே பண்பின் றொகையே(ய்)
உம்மைத் தொகையே யன்மொழித் தொகையென்(று)
அவ்வா றென்ப தொகைமொழி நிலையே.

(தொல். நூ. 895)

ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm12022026

என்னும் நூற்பாவில் தொல்காப்பியர் வகுத்த தொகை மொழி நிலைகளைப் பின்வந்த இலக்கண நூல்களான வீரசோழியம், நேமிநாதம், நன்னூல், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம் ஆகியவை பின்பற்றி, தொகை மொழிகளை ஆறாகவே வகுத்துக் கொண்டன. வீரசோழியம், பிரயோக விவேகம் போன்ற நூல்கள் வடமொழி இலக்கண மரபின் தாக்கத்தால் சமாசன்களுடன் தமிழ் இலக்கண மரபினில் அமையும் தொகைகளை ஒப்பிட்டுக் கூறுகின்றன.

வீரசோழியம் தொகைநிலைத் தொடர்களை வடமொழி இலக்கண மரபின்படி, ஆறாக வகுத்துக் கூறுகிறது. அவையாவன தற்புருட சமாசன், பலநெல் சமாசன், கன்மதாரய சமாசன், துவிகு சமாசன், துவந்துவ சமாசன், அவ்வியபாவ சமாசன். பிரயோக விவேகத்தில் தொகையின் வகைகளை விளக்கும் இருபதாம் காரிகையின் உரையில்,

> **தற்புருடன் – வேற்றுமைத் தொகை; துவிகு – எண்ணொடு பொருள் புணர்ந்த எண் தொகை; வெகுவிரீகி – அன்மொழித் தொகை; கருமதாரயன் – பண்புத்தொகை; அவ்வியயீபாவம் – முன்னும் பின்னும் மொழி அடுத்து வரும் இடைச்சொல் தொகை; துவந்துவன் – உம்மைத்தொகை (*பிரயோக விவேகம்* 129)**

என்று சுப்பிரமணிய தீட்சிதர் கூறியுள்ளார். ஆயினும் ஆராய்ந்துபார்த்தால், தமிழ் இலக்கணத்தில் அமையும் தொகை மொழிகளுக்கும் வடமொழி இலக்கணத்தில் அமைந்துள்ள சமாசன்களுக்கும் உள்ள நுட்பமான வேறுபாடுகள் புலப்படும்.

தொகைமொழி அமைப்பு

தொகைகளின் வகைகள் குறித்து, உரையாசிரியர்கட்குள்ளும் பிற்கால இலக்கணிகட்குள்ளும் எவ்விதக் கருத்து வேறுபாடும் இல்லை. ஆனால் தொகைகள் குறித்த வரையறையில் இருவேறு கருத்துகள் காணப்படுகின்றன.

உருபு தொக வருவது தொகை என்று ஒருசாரார் கருதுகின்றனர். அதாவது, வேற்றுமை உருபு முதலான உருபுகள் தொக்கி வருவது தொகை என்கின்றனர். மற்றொருசாரார், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சொற்கள் பிளவுபடாமல் தம்முள் ஒற்றுமைப்பட ஒட்டி ‘ஒரு சொல் நீர்மைத்தாய்’ வருவதே தொகை எனக் கருதுகின்றனர். எனவே அவ்வறுவகைத் தொகைகளுள் வேற்றுமைத் தொகைகள் குறித்த இவ்விரு சாரார்களின் கருத்து நிலைகளும் எங்ஙனம் அமைகின்றன என்று காண்போம்.

, | Copyright © Author(s)

Tamilmanam International Research Journal of Tamil Studies
Volume 12, Issue 02 (July-2026)
www.tamilmanam.in
ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm12022026

வேற்றுமைத் தொகைகள்

தொல்காப்பியர், வேற்றுமை என்பது எண்வகைப்படும் என்றும் ஐ, ஒடு, கு, இன், அது, கண் என்பவை வேற்றுமை உருபுகள் என்றும் அவ்வேற்றுமையானது பல்வேறு பொருள்களை உணர்த்தி, விரியும் தன்மைத்து என்றும் தொல்காப்பியத்தில் கூறியுள்ளார். மேலும் இவ்வேற்றுமைக்குரிய இலக்கணங்களெல்லாம் வேற்றுமைத் தொகைகளுக்கும் பொருந்தி அமையும் என்றதனால் வேற்றுமைத் தொகைகள் குறித்த ஆராய்ச்சி முற்காலத்தில் இருந்து இக்காலம் வரை தொடர்ந்து நிகழ்ந்துகொண்டே இருக்கிறது. இடைக்கால உரையாசிரியர்கள், பிற்கால இலக்கண அறிஞர்கள், மொழியியலாளர்கள் ஆகியோர் வேற்றுமைத் தொகைகள் குறித்துத் திட்பமாகவும் நுட்பமாகவும் ஆராய்ந்துள்ளனர்.

இடைக்கால உரையாசிரியர்கள்

இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார் ஆகிய நான்கு இடைக்கால உரையாசிரியர்களும் வேற்றுமைத் தொகை குறித்துத் தத்தம் கருத்துகளைக் கூறியுள்ளனர்.

அ) இளம்பூரணர்

தொல்காப்பியத்திற்கு முதலில் முழுவதுமாக உரை செய்தவரான இளம்பூரணர், **“வேற்றுமை உருபு தொக்கு நின்ற தொகைச் சொற்கள், அவ்வுருபு இருந்தாங்கே பொருள்படும்” (*தொல்காப்பியம் சொல்லதிகாரம் உரைக்கொத்து* 59)** என்று மிக எளிமையாக வேற்றுமைத் தொகையினை விளக்குகிறார். அதாவது, வேற்றுமை உருபு தொக்கினாலே அதனை, தொகை எனலாம் என்பது இவர் கருத்தாகிறது.

(எ-டு)

நிலம் கடந்தான்	-	நிலத்தைக் கடந்தான்
தாய் மூவர்	-	தாயொடு மூவர்
கரும்பு வேலி	-	கரும்பிற்கு வேலி
வரைவீழ் அருவி	-	வரையின் வீழ் அருவி
யானைக் கோடு	-	யானையது கோடு
குன்றக்கூகை	-	குன்றத்துக்கண் கூகை

ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm12022026

என்று வேற்றுமை உருபுகள் தொக்கிய நிலையையும் விரிந்த நிலையையும் எடுத்துக்காட்டி விளக்குகிறார். மேலும், வேற்றுமை உருபுகள் விரிந்தால் என்ன பொருள் வருமோ, தொக்கி வந்தாலும் அதே பொருள்தான் வர வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆ) சேனாவரையர்

சேனாவரையர், வேற்றுமைத் தொகைகளை இளம்பூரணரைக் காட்டிலும் விரிவாக விளக்க முற்பட்டுள்ளார். இவர்,

> **உருபு முதலாயின தொகுதல் எல்லாத் தொகையினும் செல்லாமையின் எல்லாத் தொகைக்கண்ணும் செல்லுமாறு ஒட்டி ஒரு சொல்லாதல் தொகை இலக்கணமாய் முடிதலின், இவ்வாசிரியருக்கு இதுவே துணிவு. (*தொல்காப்பியம் சொல்லதிகாரம் உரைக்கொத்து* 167)**

என்று கூறி, உருபு தொகுவதே தொகை என்ற கருத்திற்கு மறுப்பு தெரிவிக்கிறார். எங்ஙனமாயின், இரண்டாம் வேற்றுமையும் ஏழாம் வேற்றுமையும் இரு மொழிகளின் இடையேயன்றி, ஈற்றிலும் தொகும்.

(எ-டு)

செய்தான் பொருள்	-	பொருளைச் செய்தான்
இருந்தான் மாடத்து	-	மாடத்தில் இருந்தான்

இவ்வாறான வினைமுற்றுத் தொடர்கள், ஒட்டி ஒரு சொல் போல் இசைக்காமல் பிளவுபட்டு இசைப்பன. எனவே **“எல்லாத் தொகையு மொருசொன் னடைய” (தொல். நூ. 903)** என்னும் இலக்கணத்தோடு இவை மாறுபடுகின்றன. ஆகையால் இவை தொகை மொழிகள் ஆகா என்கிறார். மேலும் வேழக்கரும்பு, கேழற்பன்றி என்பவற்றில் தொக்கன இல்லை என்றாலும் அவை தொகைகளாகவே கருதப்படும் என்பதால், உருபு தொகுவதே தொகை எனும் கருத்து பொருந்தாமல், ஒட்டி ஒரு சொல் நடையில் வருவனவே தொகை என்னும் கருத்தே பொருந்தும் என்கிறார்.

மேலும், **“உருபு தொடர்ப்பொருள் உணர்த்தும் ஆற்றல் இல்லன தொகா; அவ்வாற்றல் உடையனவே தொகுவன” (*தொல்காப்பியம் சொல்லதிகாரம் உரைக்கொத்து* 168)** என்கிறார். அதாவது, சாத்தனொடு வந்தான், சாத்தனுக்குக் கொடுத்தான் என்ற வேற்றுமை உருபு விரிந்த

, | Copyright © Author(s)

ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm12022026

தொடர்களில் உள்ள உருபினை நீக்கினால், சாத்தன் வந்தான், சாத்தன் கொடுத்தான் என்றாகும். இவை தொடரின் பொருளை உணர்த்தவில்லை. எனவே இவை தொகைகள் ஆகா.

உருபு இல்லை என்றாலும் தொடர்ப்பொருளை உணர்த்துவனவே தொகைகள். எனவே சேனாவரையர், வேற்றுமை உருபுத் தொகையையும் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகையையும் வேற்றுமைத் தொகைகளாகக் கொள்கிறார்.

(எ-டு)

நிலம் கடந்தான்	-	நிலத்தைக் கடந்தான்
குழைக்காது	-	குழையை உடைய காது
தாய் மூவர்	-	தாயொடு மூவர்
பொற்குடம்	-	பொன்னான் இயன்ற குடம்

இவ்வாறு வேற்றுமைத் தொகை அவ்வேற்றுமை உருபு தொடர்ப்பொருள் உணர்த்தியாங்கு உணர்த்தும் என்கிறார் சேனாவரையர்.

இ) நச்சினார்க்கினியர்

இவர் உருபு தொகுவதே தொகை என்னும் கருத்தினைக் கொண்டவர். ஏனெனில்,

"ஐம்பா லறியும் பண்புதொகு மொழியுஞ்" **(தொல். நூ. 483)**

எனவும்

"செய்யுஞ் செய்த வென்னுங் கிளவியின்
மெயொருங் கியலுந் தொழில்றொகு மொழியுந்" **(தொல். நூ. 483)**

எனவும்

"பிறிதுபிறி தேற்றலு முருபுதொக வருதலும்" **(தொல். நூ. 106)**

எனவும்

"மெய்யுருபு தொகாஅ விறுதி யான" **(தொல். நூ. 107)**

எனவும்

"பண்புதொக வரூஉங் கிளவி யானும்" **(தொல். நூ. 901)**

எனவும்

"உம்மை தொக்க பெயர்வயி னானும்" **(தொல். நூ. 901)**

எனவும்

"வேற்றுமை தொக்க பெயர்வயி னானும்" **(தொல். நூ. 901)**

எனவும்

"உம்மை யெஞ்சிய விருபெயர்த் தொகைமொழி" **(தொல். நூ. 224)**

Tamilmanam International Research Journal of Tamil Studies
Volume 12, Issue 02 (July-2026)
www.tamilmanam.in
ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm12022026

எனவும் தொல்காப்பியர் நூற்பா இயற்றியுள்ளதை எடுத்துக்காட்டி, தொகைகள் என்பன தொக்கு நிற்பனவே என்கிறார். மேலும், வேழக்கரும்பு, கேழற்பன்றி போன்ற இருபெயரொட்டுப் பண்புத் தொகைகட்குள்ளும் ஒன்றையொன்று விசேடித்து நிற்கின்ற தன்மையை உணர்த்தும் ‘ஆகிய’ என்னும் சொல் தொக்கு நிற்கின்றது என்கிறார் நச்சினார்க்கினியர்.

ஈ) தெய்வச்சிலையார்

இவர் வேற்றுமைப் பொருளுக்கு முதன்மை அளித்து, தொகையை வரையறுக்கிறார். **“தொகைச்சொல்லாவது, பொருள் உணர்த்தும் சொல் ஆயினும் தொழில் உணர்த்தும் சொல் ஆயினும் இரண்டு சொல் விட்டிசைத்து நில்லாது, ஒட்டி நிற்பது” (*தொல்காப்பியம் சொல்லதிகாரம் உரைக்கொத்து* 465)** என்று கூறுகிறார். இக்காலத்தில் நாம் கூறும் உருபும் பயனும் உடன் தொக்கத் தொகைகளையே அவர் வேற்றுமைத் தொகைகள் என்கிறார்.

(எ-டு)

படைக்கை	-	படையைப் பிடித்த கை
குதிரைத்தேர்	-	குதிரையான் பூட்டப்பட்ட தேர்
தாய்மூவர்	-	தாயொடு கூடி மூவர்
கடி சூத்திரப் பொன்	-	கடி சூத்திரத்திற்கு வைத்த பொன்
வரையருவி	-	வரையினின்றும் வீழாநின்ற அருவி
யானைக்கோடு	-	யானையது கோடு
குன்றக்கூகை	-	குன்றத்துக்கண் வாழாநின்ற கூகை

இவ்வாறு எடுத்துக்காட்டுகளைக் காட்டி, வேற்றுமைப் பொருள் தொக்கி வருவதே தொகை என்று கூறுகிறார். தாய்மூவர் என்பதைப் பிற உரையாசிரியர்கள், ‘தாயொடு மூவர்’ என்று விரிக்க, தெய்வச்சிலையார் ‘தாயொடு கூடி மூவர்’ என விரிப்பது இவர் கொள்கையை வலுவாகக் காட்டுகிறது.

மேலும் வேற்றுமைத் தொகையை, வேற்றுமைப் பொருள் குறித்த தொகை என்று விளங்கிக்கொண்டு வேற்றுமைப் பொருண்மைக்கே முதன்மை அளித்துத் தொகையினை விளக்குகிறார் தெய்வச்சிலையார்.

,| Copyright © Author(s)

ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm12022026

பிற்கால இலக்கண அறிஞர்கள்

இடைக்கால உரையாசிரியர்கள் தொகை குறித்த தத்தம் கருத்துகளைத் தத்தம் உரைகளின் மூலம் உணர்த்தினர். பின்னர் வந்த பிற்கால அறிஞர்களும் தத்தம் கொள்கைகளைப் பதிவுசெய்துள்ளனர்.

அ) ஆ. சிவலிங்கனார்

தொல்காப்பிய உரைவளம் செய்த ஆ.சிவலிங்கனார், உருபு தொகுவதே தொகை என்னும் கருத்து உடையவர். இவர் வினைத்தொகைக்கும் அன்மொழித்தொகைக்கும் உருபு இருப்பதாகக் கூறுகிறார். எவ்வாறெனின் வளர்ந்த பிறை என்பது 'வளர்பிறை' என வரும்போது 'வளர்' என்னும் தனியுருபு மறையவில்லை. ஆனால் 'வளர்ந்த' என்பதில் உள்ள பெயரெச்ச விகுதியும் இறந்தகால இடைநிலையும் மறைந்துள்ளன. வினைச்சொல்லில் வரும் இடைநிலை விகுதிகளும் உருபு எனப்படும். எனவே உருபு தொகுதல் வினைத்தொகைக்கும் உண்டு என்கிறார்.

இவ்வாறே அன்மொழித்தொகையிலும் 'பொற்றொடி வந்தாள்' என்பதில் 'பொற்றொடியள்' என விகுதி உருபும் 'தகரஞாழல் வந்தாள்' என்பதில் 'தகரஞாழலள்' என விகுதி உருபும் மறைந்து காணப்படுதலின் அதுவும் தொகை எனப்படும். இவ்வாறு கொள்ளும்போது உருபு தொகுதல் தொகை என்னும் இலக்கணம் மிகப் பொருந்தும் என்கிறார்.

ஆ) ச. பாலசுந்தரனார்

தொல்காப்பியத்தைப் புதிய நோக்கினில் ஆய்ந்து தொல்காப்பிய ஆராய்ச்சிக் காண்டிகை உரை செய்த பாவலரேறு ச. பாலசுந்தரனார். இவர் தொடர் என்பது எழுவாயும் பயனிலையுமாகத் தொடர்ந்து நிற்கும் என்பதும் அத்தொடர் இரண்டும் பலவுமாகிய சொற்களால் ஆகிவரும் என்பதும் ஆகும்; தொகைமொழி என்பது இரண்டு முதலாகத் தொக்கு ஒரு பொருளைக் குறித்து வருவது; அவை பொற்றொடி, மதிமுகம் போன்று இருமொழித் தொகையாயும் சேர சோழ பாண்டியர், பல்யாகசாலை முதுகுடுமி பெருவழுதி போன்று பன்மொழித்தொகையாயும் வரும் என்கிறார்.

வேற்றுமைத்தொகை குறித்துக் கூறுகையில், **"வேற்றுமைத் தொகையே வேற்றுமை யியல" (தொல். நூ. 896)** என்றதால் வேற்றுமைத் தொகையாவது வேற்றுமை பற்றி முன்னர்க் கூறப்பெற்ற அவ்விலக்கணங்களே என்கிறார்.

ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm12022026

அவ்விலக்கணங்களாவன:

அ) வேற்றுமைப் புணர்ச்சியில் நிறுத்த சொல்லும் குறித்துவரு கிளவியும் புணரும்போது வேற்றுமை உருபு தோன்றாமல் வேற்றுமைப் பொருள் தோன்றுமாறு புணரும் இலக்கணம்.

(எ-டு)

பழம் + தின்னி – பழத்தைத் தின்னி என்று வேற்றுமை உருபு தோன்றுமாறு புணராமல், பழத்தைத் தின்னும் இயல்பினது என்று வேற்றுமைப் பொருள் தோன்றுமாறு புணர்வது.

ஆ) வேற்றுமைப் பொருளை விரித்தால், பலவாறாகப் பொருள் புணர்ந்து இசைப்பது என்னும் இலக்கணம்.

(எ-டு)

மரவேலி – மரம் + வேலி

(i) மரத்தினால் ஆன வேலி
(ii) மரத்திற்கு இட்ட வேலி
(iii) மரத்தினுடைய வேலி

என வேற்றுமைப் பொருளை விரித்தால், பல பொருள்களில் வரும். இவை தொடரினில் இடம்பெறும் சூழல் நோக்கியே பொருளை உணர்த்தும்.

இ) உருபு தொக்கு வரும்போது, கவர்படு பொருள் வருதல் கூடாது.

(எ-டு)

சாத்தனுக்குக் கொடுத்தான்

சாத்தன் கொடுத்தான் என உருபு தொக்கு வந்தால் பொருள் மாறும். எனவே இது வேற்றுமைத் தொகைமொழி அல்ல. இவ்வாறு வேற்றுமைத்தொகையின் இலக்கணங்களைக் கூறுகிறார். பின்னர் நிலங்கடந்தான், வேலெறிந்தான் என்னும் வேற்றுமை உருபு தொக்கிய தொடர்மொழிகள் எழுவாயும் பயனிலையுமாக நில்லாது, நிலங்கடந்தவன், வேலெறிந்தவன் என்னும் பொருளில் ஒரு பொருளைச் சுட்டிவரின் அவை தொகைமொழிகள் ஆகின்றன என்கிறார்.

Tamilmanam International Research Journal of Tamil Studies *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
Volume 12, Issue 02 (July-2026)
www.tamilmanam.in *DOI:* *https://doi.org/10.63300/tm12022026*

ஆகவே இவர், உருபு தொக்கு வருவது மட்டும் வேற்றுமைத்தொகை என்று கூறாமல், ஒரு சொல் நடைய வருவனவற்றை வேற்றுமைத்தொகை எனக் கூறுவதே பொருந்தும். ஒரு சொல் நடைய என்பது,

(i) எழுவாயாக நிற்கும்.

(எ-டு)

பொற்றொடி – மூன்றாம் வேற்றுமைத்தொகை

பொற்றொடி உடைந்தது.

(ii) பெயர்ப் பயனிலையாகும்.

(எ-டு)

இது பொற்றொடி.

இங்ஙனம் வேற்றுமைத்தொகைகள் ஒரு சொல் போல் இயங்க வேண்டும். மேலும் உருபு முதலாயின தொக்கு நிற்பினும் கடந்தான் நிலம், இருந்தான் மாடத்து என விட்டிசைத்து வந்தால் அது தொகைமொழி ஆகாது என்கிறார்.

மொழியியலாளர்கள்

மரபு இலக்கணத்திலும் மொழியியலிலும் ஆழங்கால் பட்ட அறிஞர்களும் தொகைகள் குறித்த தத்தம் கருத்துகளைப் பதிவுசெய்துள்ளனர்.

அ) ச. அகத்தியலிங்கம்

தொல்காப்பியத்தில் உள்ள தொடரியல் கூறுகள் குறித்துப் பெருமளவு ஆராய்ந்தவர் பேராசிரியர் ச. அகத்தியலிங்கனார். இவர்,

> **ஒரு பெயர்த்தொடரில் காணப்படும் இரண்டு சொற்கள் தம்மிடையே உள்ள இலக்கணத்தொடர்பை வெளிப்படையாகக் காட்டும் உருபுகள், சொற்கள் போன்றவை தொக்கு நிற்க இணைந்து ஒரு சொல் நீர்மைத்தாய் வந்து ஒரு பெயர்ப்பொருளைத் தருமானால் அது தொகை எனப்படும். (*தமிழ்மொழி அமைப்பியல்* 105)**

Tamilmanam International Research Journal of Tamil Studies *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
Volume 12, Issue 02 (July-2026)
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm12022026*

எனத் தொகைமொழிக்கு ஒரு வரையறை தருகிறார்.

(எ-டு)

பணப்பெட்டி – பணத்தை உடைய பெட்டி.

பணம் + பெட்டி – இரண்டு சொற்கள் சேரும்போது இலக்கணத்தொடர்பினைக் காட்டக்கூடிய ‘ஐ’ உருபும் ‘உடைய’ என்னும் சொல்லுருபும் மறைந்து, ‘பணப்பெட்டி’ என்று ஒரு சொல் நீர்மைத்தாகிறது என்கிறார்.

மேலும் இவர், நிலங்கடந்தான் என்னும் சொல்லை நிலமா கடந்தான், நிலமே கடந்தான் என்று இடைச்சொற்களைச் சேர்த்துக் கூறவும் முடியும்; ‘கடந்தான் நிலம்’ என்று வரிசை முறை மாற்றவும் முடியும். எனவே இது ஒரு சொல் நீர்மைத்தாய் இல்லை. ஆகையால் இவ்வகையானவற்றை வேற்றுமை உருபு தொக்கச் சொற்கள் என்று கூறலாமே தவிர வேற்றுமைத்தொகைகள் என்று கூற முடியாது என்கிறார். ஏனெனில் தொகைகளின் பண்பு என்பது ஒரு சொல் நீர்மைத்தாய் நின்று புதிய சொல்லாக்கங்களுக்குத் துணைபுரிவது. தமிழில் காணப்படும் புதிய சொல்லாக்கங்கள் பெரும்பாலும் தொகைச்சொல்லாகவே இருக்கும் என்று கூறுகிறார்.

ஆ) செ.வை.சண்முகம்

தொல்காப்பியத் தொடரியல் கூறுகளை மொழியியல் நோக்கினில் ஆராய்ந்தவர் பேராசிரியர் செ.வை.சண்முகனார். இவர், தொகை குறித்துப் பல்வேறு வகைகளில் சிந்தித்திருக்கிறார். மேலும் தொகை என்பது மொழியியல் நோக்கில் சொல்லியலுக்கும் தொடரியலுக்கும் இடைப்பட்டது; அல்லது இரண்டும் கலந்தது. பெரும்பான்மையும் இரண்டு சொற்கள் சேர்ந்து உண்டாவதால் அது தொடரியலோடு தொடர்பு உடையது. அது ஒரு சொல் போலச் செயல்பட்டு ஒட்டுகளையும் வேற்றுமை உருபுகளையும் பெறுவதால் சொல்லியலும் கலந்துள்ளது. தொகை என்பது இறுகிய கட்டமைப்பு உடையது. அதனால் தான் ஒரு சொல் நீர்மைத்து எனப்படுகிறது எனத் தொகை குறித்துப் பல்வேறு கருத்துகளைப் பதிவுசெய்துள்ளார்.

முடிவுரை

இவ்வாறாகத் தொகை குறித்துப் பல்வேறு விளக்கங்களை உரையாசிரியர்களும் அறிஞர்களும் மொழியியலாளர்களும் தந்துள்ளனர். இவ்விளக்கங்களில் இருந்து,

ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm12022026

தொகைமொழிகள் என்பதை எவ்வாறு புரிந்துகொள்ளலாம் என்றால், தொல்காப்பியர் பெயரியலில் சொல் குறித்துக் கூறும் நூற்பாக்களில்,

"எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே."

(தொல். நூ. 642)

"பொருண்மை தெரிதலுஞ் சொன்மை தெரிதலுஞ்
சொல்லி னாகு மென்மனார் புலவர்."

(தொல். நூ. 643)

"தெரிபுவேறு நிலையலுங் குறிப்பிற் றோன்றலும்
இருபாற் றென்ப பொருண்மை நிலையே."

(தொல். நூ. 644)

என்று பொருளின் முதன்மையினை உணர்த்திய பிறகே சொல்லின் வகைகளைப் பற்றிக் கூறுகிறார். தொல்காப்பியர், பொருளைக் குறிக்கும் ஒலிக்குறிப்புகளே சொல் ஆகும் என்றும் பொருளைக் குறிக்காத வெற்றொலிகளைச் சொல் எனல் கூடாது என்றும் மிக நுட்பமாக உணர்த்துகிறார். எனவே பொருண்மையே ஒரு மொழிக்கு அடிப்படை. ஒரு சொல் பொருளைக் குறிக்கவே பயன்படும்; ஒரு தொடரே பொருளை உணர்த்தப் பயன்படும். எனவே தொகைமொழிகளிலும் பொருண்மைக்கே முதன்மை அளிக்க வேண்டும்.

ஆகையால், ஒரு தொகைமொழி அத்தொகைப் பொருளினை உணர்த்துகிறதா? என்பதையே முதலில் பார்க்கவேண்டும். இப்போது, 'கங்கை கொண்டான்' என்ற வேற்றுமைத் தொகையை எடுத்துக்கொண்டால், பகையை வென்று கங்கையைக் கொணர்ந்தவன் என்று வேற்றுமைப் பொருளை உணர்த்தி விரிந்ததால் இது தொகைமொழி ஆயிற்று. மேலும் இது விட்டிசையாமல் ஒரு சொல் நடையில் வருவதாலும் இது தொகைமொழி ஆயிற்று. எனவே வேற்றுமைப் பொருண்மைக்கு முதன்மை அளித்து, ஒரு சொல் நடையில் வருவனவற்றை வேற்றுமைத் தொகைமொழிகள் என்று கூறுவதே பொருந்தும்.

ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm12022026

துணைநூற் பட்டியல்

[1]. **அகத்தியலிங்கம், ச.** *தமிழ்மொழி அமைப்பியல்.* மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம், 2016.

[2]. **சண்முகம், செ. வை.** *தொல்காப்பியத் தொடரியல்.* உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2004.

[3]. **சுப்பிரமணிய தீக்கிதர்.** *பிரயோக விவேகம் மூலமும் - உரையும்.* சரசுவதி மகால் நூல் நிலையம், தஞ்சாவூர், 1973.

[4]. **தொல்காப்பியர்.** *தொல்காப்பியம் சொல்லதிகாரம் (உரைவளம்) எச்சவியல்.* ஆ. சிவலிங்கனார் (ப.ஆ.), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1988.

[5]. **தொல்காப்பியர்.** *தொல்காப்பிய மூலம் பாட வேறுபாடுகள் - ஆழ்நோக்காய்வு.* பதிப்பாசிரியர்கள் கே.எம். வேங்கடராமையா, ச.வே. சுப்பிரமணியன், ப.வெ. நாகராசன், பன்னாட்டுத் திராவிட மொழியியற் கழகம், திருவனந்தபுரம்,1996.

[6]. **தொல்காப்பியர்.** *தொல்காப்பியம் (தொகுதி-2) சொல்லதிகாரம் - ஆராய்ச்சிக் காண்டிகையுரை.* ச. பாலசுந்தரம் (உ.ஆ.), பெ. மாதையன் (ப.ஆ.), பெரியார் பல்கலைக்கழகம், சேலம், 2012.

[7]. **தொல்காப்பியர்.** *தொல்காப்பியம் சொல்லதிகாரம் உரைக்கொத்து: இடையியல், உரியியல், எச்சவியல்.* தி. வே. கோபாலய்யர் (ப.ஆ.), தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 2013.

[8]. **பாலசுந்தரம், ச.** *மடைமாறிய தமிழிலக்கண நூல்கள்.* தாமரை வெளியீட்டகம், தஞ்சாவூர், 1998.

[9]. **புத்தமித்திரனார்.** *வீரசோழியம் மூலமும் பெருந்தேவனார் இயற்றிய உரையும்.* கா.ர. கோவிந்தராஜ முதலியார் (ப.ஆ.), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2011.

References

[1]. **Agathiyalingam, S.** *Thamizhmozhi amaippiyal.* Meyyappan thamizhaaivagam, Chithambaram, 2016.

[2]. **Shanmugam, S. V.** *Tholkaappiya thodariyal*. Ulaga thamizharaaichi niruvanam, Chennai, 2004.

[3]. **Subramaniya theekkithar.** *Pirayoga vivegam moolamum – uraiyum.* Sarasuvathi mahaal nool nilaiyam, Thanjavur, 1973.

[4]. **Tholkaappiyar.** *Tholkaappiyam sollathikaaram (uraivalam) echaviyal*. A. Sivalinganaar (ed.), Ulaga thamizharaaichi niruvanam, Chennai, 1988.

[5]. **Tholkaappiyar.** *Tholkaappiya moolam paada verupaadukal – Aazhnokkaaivu.* K.M. vengadaraamaiya, S.V. Subramaniyan, P.V. Nagaraasan (eds.), Pannaattu thiravida mozhiyir kazhagam, Thiruvananthapuram, 1996.

[6]. **Tholkaappiyar.** *Tholkaappiyam (vol–2) sollathigaaram – aaraaichi kaandigaiyurai.* S. Balasundharam (Commentator), P. Maathaiyan (ed.), Periyaar palkalaikkazhagam, Selam, 2012.

[7]. **Tholkaappiyar.** *Tholkaappiyam sollathikaaram uraikkothu: idaiyiyal, uriyiyal, echaviyal,* T.V. Kobaalaiyar (Commentator), Thamizh palkalaikazhagam, Thanjavur, 2013.

[8]. **Balasundharam, S.** *Madaimaariya thamizhilakkana noolgal.* Thaamarai veliyeettagam, Thanjavur, 1998.

[9]. **Puthamithiranaar.** *Veerasozhiyam moolamum perunthevanaar iyatriya uraiyum.* K.R. Govintharaaja muthaliyaar (ed.), New century book house, Chennai, 2011.

,| Copyright © Author(s)